சீர்செய்வதற்கும், குடிநீருக்கு bore well வண்டி செல்வதற்கும், ஜே.சி.பி., பொக்லைன் போன்ற இயந்திரங்கள் செல்வதற்கும் வனத் துறையினால் அனுமதி மறுக்கப்படுகிறது. ஆகவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *இதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஔ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஈஞ்சம்பாக்கம், பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற சோழிங்கநல்லூர் தொகுதியில் ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர் பகுதியில் நீண்ட நெடுநாட்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் 3,000 குடும்பங்களை அப்புறப்படுத்துகிற நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கிட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

(அஅ) கூடங்குளம் அணு உலை, நிலமளித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் கூடங்குளம் அணு உலை அமைவதற்கு நிலம் அளித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி, அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

நண்பகல் 12-00

(அஆ) திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள், வளவனாற்றைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*